
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் - நாமக்கல் மாவட்டம்
திருச்செங்கோடு நகராட்சி

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம்நகராட்சி, சீத்தாராம்பாளையம் கிராமம், பழைய சர்வே எண்: 23/2, வார்டு-A பிளாக்-7 நகர புல எண் 10/6-ல் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.

அளவு : 1:800

இலையதள கோப்பு எண் : GST/RRVIR/3042/2022

வ



குறிப்பு

1.மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு	:	0.94635 ஏக்கர் (அ) 3829.74 ச.மீ
2.சாலையின் பரப்பு	:	822.40 ச.மீ
3.மனைப்பிரிவு எல்லை	.....	
4.உத்தே மனைப்பிரிவு சாலை	.....	
5.நிலையில் உள்ள சாலை	.....	
6.கோரிய மனைகளின் எண்ணிக்கை	:	15
7.ஒதுக்கிய மனைகளின் எண்ணிக்கை	:	12
8.ஒதுக்கப்பட வேண்டிய பூங்காவிற்கான பரப்பு	:	(மனைப்பிரிவின் மொத்தபரப்பு - சாலைகளின் மொத்தபரப்பு)×10% 3829.74 - 822.40 =300.74ச.மீ

அரசாணை எண்.18-ன் நகராட்சி (ம) குடிநீர் வழங்கல் துறை நாள்.4.2.2019-ன் படி அரசு வழிகாட்டி மதிப்பின்படி தொகையை செலுத்தப்பட்டுள்ளது.

9. ஒப்படைக்கப்பட்ட மின்பகிர்மானம்	:	15.60ச.மீ (0.52%)
10. ஒப்படைக்கப்பட்ட பொது ஒதுக்கீடு	:	15.60ச.மீ (0.52%)

பொது ஒதுக்கீடுகள்:

உள்ளாட்சிக்கு மனுதாரரால் தானமான ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சாலையின் பரப்பு	:	822.40 ச.மீ
ஒப்படைக்கப்பட்ட மின்பகிர்மானம்	:	15.60ச.மீ (0.52%)
ஒப்படைக்கப்பட்ட பொது ஒதுக்கீடு	:	15.60ச.மீ (0.52%)
மூலை முடக்கு	:	12.0மீ சாலை வரை 1.5மீx1.5மீ

நிபந்தனைகள்:

1. இம்மனைப்பிரிவுக்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தினை எந்தத் துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும், உள்ளாட்சி உறுதி செய்துகொள்ள வேண்டும்.
2. அரசானை எண்.134 ஊரக வளர்ச்சி துறை நாள் 20.09.2002-ன் படி நில உரிமம் குறித்து உள்ளாட்சி நிர்வாக அதிகாரி முழு திருப்தியில் உள்ளது எனச் சான்றளித்துள்ளதன் பேரில் இம்மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.
3. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டாலோ அல்லது மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டாலோ மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு இயக்குநர்/ ஆணையர் சென்னை அவர்களால் ரத்து செய்யப்படும்.
4. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும்போது இவ்வனையின் நகலேடு நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஆணையின் நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
5. நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை தொழில்நுட்ப அனுமதி - திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம் - குத்தகைப்பத்திரம் - பட்டா - தானப்பத்திரம் - பொது அதிகாரப்பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது. சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும் விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிபடுத்திக்கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அத்தனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத்துறை பொருத்தமான அமைப்பு அல்ல.
6. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்த வித மாற்றம் விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6'x4' அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரகரிக்கப்பட வேண்டும்.
7. உத்தேச மனைப்பிரிவு அமையும் நிலம் தொடர்பாக நீதிமன்ற வழக்கு ஏதேனும் நிலுவையில் இருப்பின் இத்துறையின் அனுமதி செல்லத்தக்கதல்ல.
8. உத்தேச மனைப்பிரிவின் ஊடே நீர்நிலைகள் அமையுமாயின் அதற்கு பாதிப்பு ஏற்படாதவாறு கட்டிடங்கள் கட்டப்பட வேண்டும்.
9. உத்தேச மனைப்பிரிவு இடத்தில் கட்டிடம் கட்டும் போது உரிய விதிகளை பின்பற்றி உரிய அனுமதி பெற்று கட்டப்பட வேண்டும்.
10. உத்தேச மனைப்பிரிவில் எந்தவித மாற்றம் செய்வதாக இருந்தாலும் இத்துறையின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.

Document certified by Manimekalai.A.

Signed by: Assistant Director
Location:Namakkal
Date:2022.12.[illegible]14:07

ந.க.எண் 3169/2023/எம1 - நாள் 22.2.2024ன் அதலன் நகல் உச்சியல் குறிப்பிட்டுள்ள நிபந்தனை - களுக்குட்பட்டு மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கப்படுகிறது -

ஆணையாளர்,
திருச்செங்கோடு நகராட்சி.

APPROVAL NO/ SWP/DTCP/ NAMAKKAL LAYOUT NO :264/2022

உதவி இயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
நாமக்கல் மாவட்டம்.